# சிந்து பிரபந்தங்கள் மூன்று:
# "1. கண்டனூர் முத்துராமையா இயற்றிய
# கண்டனூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் கப்பற் சிந்து.
# 2. "நந்தனவருட சிந்து" & 3. "அகடவிகட கலியாணச் சிந்து"

1. kaNTanUr sri mInATAci cuntarEsvarar kappaR cintu,
2. nantana varuTac cintu & 3. akaTavikaTa kaliyANac cintu
In Tamil script, unicode/utf-8 format


**Acknowledgements:**
Our Sincere thanks go to Roja Muthiah Research Library (RMRL), Chennai for providing a scanned PDF of this work.
This e-text has been prepared using Google OCR online tool and subsequent proof-reading of the output file.
Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.



© Project Madurai, 1998-2026.
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of Tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website
https://www.projectmadurai.org/
You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

## சிந்து பிரபந்தங்கள் மூன்று:
## "1. கண்டனூர் முத்துராமையா இயற்றிய
## கண்டனூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் கப்பற் சிந்து.
## 2. "நந்தனவருட சிந்து" & 3. "அகடவிகட கலியாணச் சிந்து"

**Source:**

1. கண்டனூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் கப்பற் சிந்து.

இது பெரி. கண. பழ. விலாசத்தார் விருப்பத்தின்படி
கண்டனூர், நா. பெ.நா. மு. முத்துராமையா அவர்களாலியற்றப்பெற்றது.
தேவகோட்டை "எஸ்டேட் பிரஸில்" பதிப்பிக்கப் பெற்றது.
இரண்டாம் பதிப்பு.
1920.

2. நந்தனவருட சிந்து.

இஃது, சிறுமணவூர்,முனிசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்டு,
தமதுசென்னை சூளை, சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.
1905.

3. செல்வப்பிள்ளை அகடவிகட கலியாணச் சிந்து.

சிறுமணவூர் முனிசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்டு
சென்னை-இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்களாற்றமது
ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.
1907.

-------------

## 1. கண்டனூர் முத்துராமையா இயற்றிய
## கண்டனூர் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் கப்பற் சிந்து.

**சாற்றுக்கவி.**
வேம்பத்தூர் சங்க வித்துவான்களிலொருவராகிய
சா. ஆ. சௌந்தரபாரதியார் இயற்றியது .

சீரிலு யர்லாங் கண்டனூர்
    சிறக்க வம ந் சுந் தரமீனாள்
பேரிற்கப் பற்பாட்டுச் செய்தான்
    பெருமை பெற்றத னவணிகத்
தாரிலுயர் பிரமவித் தியாபர
    சாரண மாளுசபையை யமைத்த
தேர்தலுள் ளமுத்திராமைய
    சீமானே யெங்கடவ பூமானே.

------------

சிவமயம்.

**கண்டனூர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுரர் கப்பற் சிந்து.**

ஏலேலோ தத்தய்யா கப்பல் ஏலேலோ
சீர்வளருந்தனவணிகர் - திகழுஞ்
சிறந்த கண்டனூரதனில்
ஏர்வளர்மீனாட்சி சுந்த - ரேசற்
கிசைந்த கப்பற்றமிழுரைத்த

(முடுகு)

அளவிலாச்சுந்தானம்பிகையுகந்தோ,
    னன்பருக்கருள் புரியுமானந்தவடிவோன்,
புளகமாங்கா வாரணத்துமுகயோகன்,
    பொன்னுலகோர்முதற் போற்றும் வைபோகன்,
வளமானவல்லபையை யிடம் வைத்த மோகன்,
    வாசாமகோசாமாகின்ற சொரூபன்,
உளதானகிரிகைக்கு முன்னுற வணங்கு
    முத்தமர்க்கருள் புரியுமைங்கான் றுணையே. (ஏலேலோ) (1)

தேசமெல்லாம் புகழுங்கண்ட - னூரித்
செல்வசுந்தரேசர் மீனாள்
வாசமுள்ள கப்பலுமே - மிக்க
மகமேரு போல் விளங்கும்.

(முடுகு)

வேதமெனுங்கடலிலே செல்லுகின்றதான,
    விஸ்தாரமாங்கப்பலாகமங்களாகும்,
போதமாம் புராணங்களேராவுமாகும்,
    பொற்புமிகு சாஸ்திரக தட்டுக்களாகும்,
ஏதமில்லாமிருதி பாய்மராமதாகு
    மெழிலான கீதையுஞ்சுக்கானிதாகு,
நாதனாஞ்சற் குருமாலியவானாய்,
    நன்மையாம் லாதனைப்பாய்க் கட்டியோட்ட. (ஏலேலோ கப்பல்) (2)

சோலைமிகச்சூழுங்கண்ட - னூரிற்
சந்தாமீனாம்பிகையாள்
சாலமிகுங்கப்பலுக்குத் -- தக்க

சாதுக்களேயெசமானாம்.

(முடுகு) தூலசூக்குமமான காரணதேகஞ்,

சொந்த மாயபிமானம் வைத்து மேவிடயஞ்

சாலவே சென்றுமிகுராகத்துவேஷஞ்,

சலியாத காமமொடு குரோத லோபங்கள்.

ஏலமுளமோகம தமச்சரம் சூசை,

பரிசைடம்பமுடனதற்பமாங்காரம்,

கோல முளதப்புவஞ்சனை சோரமிடும்பை,

கொலைமுதற்பாவிகளை யேற்றாமல் விட்டு, (எலேலோ) (3)

மங்கள மாய்மகிழுங்கண்ட - னூரில்
வள்ளல் சுந்தரேசர்மீனாள்
துங்கமதாங்கப்பலுக்கு - ரிஷயத்
துடுக்கான கொடிகட்டி.

(முடுகு)

தாரமர் விவேகனொடுநிருபகன் பொறுமை,

சந்தோட னொடு சமன்றமன்விராகன்றான்,

ஆர் மருவுமியமாதியெண்மர் சாத்துவனும்,

அமுத சீலன் சாந்தி விசாரசந்தோடன்,

ஏர்மருமயித்திரி முதிதையொடுயேட்சை ,

யியல்பான கருணையுள் முத்தர்களையேற்றி,
ஓர்மறுவிலாதபரி பூரணவூருக் குடனே
சென்றிரங்கி மிகவானந்த முற்றார். (எலேலோ) (4)

தனவணிகர் சூழுங்கண் -- னூரில்
சம்புசுந்தரேசாமீனாள்
வனமுள கல்யாணமது -- நடத்த
மாணிக்கக்கப்பலுமே.

(முடுகு)

வங்காளம் வெம்பாயிபட்டண மிலங்கை

மாக்கா போய்வர மாதமூன்றாகும்,

கங்கை போற் செலமதைப் பீப்பாயடைத்துக்,

கணக்குடனாசி முதற்சாமான் சமைத்துச் ,

சிங்காரமானதோ பாய்தலையெடுத்துத்,

திடமான கயிறுகளைச் செம் மையாயிறுக்கி,
எங்குமீனக்கொடியிலங்கவேகட்டி
பிதமானமார்க்கத்திற் சுக்கானைத் திருப்பி,
அங்க முளமானகப்பித்தான்களைய தட்டி,
யன்புடன் மீனா ட்சியையகத்தினிற்கொண்டாடித்,
தங்காமலோங் கிவருமலைகளைப்பார்த்து,
தண்ணீரைரெட்டைக் குழல்வேம் பாயாற்றட்டிப்,
பொங்கியேகடலூங் கொள்வதைப் பார்த்துப்,
பொலிவான விடமதில் நங்கூரத்தைப் போட்டுத்,
துங்கமுள சவுக்காவைப் பார்த்துமேயோட்டுச்,
சூழவேதோணிசுருப்போ டுடன் கூட்டு,
மங்காத சனிக்கண்ணாடியைப்பார் த்து,
மட்டிலாப்பீரங்கி வேட்டுகளைத் தீர்த்துச்
சங்கமாய்ப் பாறைமலையாதியைச் சார்ந்து,
தட்டா மல் மகாமீன்முட்டாமலோட்டு,
இங்கொருமூலை யிற்றோனுதொருகப்பல் ,
எக்காமலதை நோக்கிச் சுக்கானைத் திருப்பு,
பிங்கலந்திசைதனிற்பிசகாமற் பார்த்துப்,
பெருக்கான தண்ணீரிற் சுருக்காக விட்டு,
வாங்காளம் துறைமுகம் வந்திடப்பாரு
வழியாயிரங்கிமிகச்சாமான்களை வாங்கு (ஏலேலோ) (5)

கழனிமிகச்சூழுங்கண்ட - னூரில்
கன்னிமீனாட்சி சொக்கர்
வழியான கப்பலுக்குத் தெளிவாய்
வாங்குகின்றரத்னவகை

(முடுகு)
இந்திரன்றன்னால் வலா சூரன் முன்னா
ளிறந் இடவவனுடலெலும் பெலாம் பண்டு,
தந்திரவாத் தினாலரத்தினமுமாகிச்,
சமைந்ததாவோடேலத் திலுண்டான,
சுந்தரமாய்த்தோத்யமிவையெலாம் பார்க்கச் ,
சுடரொளிவிட்டிலங்குதநத்தமேயாக,
சந்திரன் போல் விளங்குமுத்துத்தானிதுவோ,

தகைமையாந் தூத்துக்குடிச் சமுத்திரத்திலுண்டாம்,
அந்தமதாமிந்தவயிரமோமிகள்,
மதிகமாஞ்சிங்கப் பூர்பினாங்கிலமரிக்கா,
சொந்தமுள மாணிக்கமாகு மிதுமெத்த,
துலங்கிடும் ரெங்கோன் அவாவுசீனத்தில்,
தந்திரமாய்க்கிடைத்ததாமிந்தக் கோமே,
தகமது மகப்படாத்தரணியிற் சுருக்காய்,
வந்ததிந் தப்பாவளமது தானுமேயெங்கும்,
வாங்கவுமகப் படாவங்காளமன்றி,
நந்தமதாகும் வைடூரியமெங் கும்,
நாளுக்குநாள் விலை கூடவேயாகும்,
புந்தியி லுணர்ந்திடப் போகுமோவிந்தப்,
புட்பராகந்தா னுங்கிடைத்தது மாத்திரஞ் ,
சிந்தையில் நினையாது வந்ததிந்த நிலம்,
தேவலோகத்தி லுண்டானது போற் சொல்வர்,
பந்தமாமாகதப் பச்சையிதன் பெருமை,
பார்வதற்குச் சேடனும் போதாதுபார்த் தால்,
எந்தவுலகத்தினுங்கிடையாதி தெல்லா,
மிப் போது கிடைத்தது மீனாட்சி கிருபை. (ஏலே) (6)

கண்டனூருவந்திருக்கு - மெங்கள்
கன்னிமீனாட்சி சுந்தரர்
தொண்டர் புகழ்கப்பலிலே - வருஞ்
சுயமான சரக்குவகை.

(முடுகு)
சுக்குதிப்பிலி மிளகு வெங்காயம் பூண்டு,
சுயமான வெந்தயங் கடுகுகற்பூரம்,
துவரான கடுக்காய் சதகுப்பையோமம்,
சொல்லொணாப் பெருங்காயம் அபினியொடுகஞ்சா,
மிக்கநல்மிளகாய் கல்லும் புடன்மிளகு,
வெட்பாலையரிசி சிறுநாகப்பூ ஏலம்,
மேலான சாதிக்காய் சாதிப்பத்திரியும்,
வேகமுளகிராம்புடன் வாய்விளங்கமதுவுந்,

தக்கஅக்ரகாரம் அதிவிடையமஞ்சள்,

சடாமஞ்சிலவங்கமொடு தாளிசபத்திரியும்,

தக்கோலம்வலம்புரிக் காய்கொத்தமல்லி,

தன்மையுள் சீரகமரத்தையொடு கூகை,

பாகமுளகோதுமை கொத்தமலியரிசி ,

பகரொணாச் சவ்வரிசிபச்சரிசி மஞ்சள்,

பண்பானபேரீச்சம்பழ மோடு முந்திரிப்,

பழமெலாம் வந்துமே பரிவுட னிறங்க. (ஏலேலோ) (7)

மன்னுலகோர்போற்றுங்கண்ட -னூரில்
மகிழுஞ்சுந்தரேசர்மீனாள்
தன்னய மாங்கப்பலிலே - வந்த
நயமான பட்டுகளாம்.

முந்து

அணியான மேகலை காஞ்சி கும்பகோணம்,

அழுத்தமுள நாகமடிப் பட்டுடன் மதுரைத்,

திணியான பொற்சரிகைச் சேலையொடுவர்னச்,

சேலைகளுஞ் செல்வமீனாட்சிக்குக் கொடுக்கத்

துணிவான சகமிரட்டி வேலுதார்ப்பட்டுத்,

தூய்தானசம்பந்திக்காகுமிதுகட்டு,

பணியாகப் பாடுமிந்தப் பெண்களுக்குயர்ந்த,

பஞ்சவர்னச் சேலைபார்த்து மேயுவப்பக்,

கணிதமுளநாத்திமார்க்காகுமிந்தருத்ர,

கண்டிச்சேலையையெடுத்துக் கட்டுடன் பத்திரம்,

மணியான மாமிமார்க்காகுமிந்தச் சிந்தா,

மணிச்சேலைவாங்கியே வகையுடன் சேர்க்கத்

தணிவிலாக்கோலமிடுஞ் சாந்தி மாரணியத்,

தக்கதிதுசவுக்காளிகடலைப்பட்டாணி,

குணியானபாங்கியர்க்கு வங்கார் கண்டி,

குணமானசேடியர்க்குச் சொர்னமுகிச் சேலை,

பிணியானதை நீக்கு விழிமிரட்டிச் சேலை,

பேதைவெள்ளாட்டிக்குக் கொடுக்கலாம் பேணு,

இணையிலாச் சிட்டர்களுக்காகுமிந்த சால்வை,

யெங்குமேயகப்படா வங்காளமன்றி,

மணவரைக்காகுமிந்தக்குண்டஞ்சிச் சேலை,

வாங்கிவைத்தபோது கொடுக்கலாநேர்த்தி
பிணையாகாவையொடுதாம்பரங்கள்,
பெரியோகட்காகுமிது பேணியே கொடுக்கத்,
துணையான மன்னர்க்குக் கொடுக்கத்தரனுயர்ந்த,
துப்பட்டா கெண்டைச்சீர் தப்பாமலிருக்க,
மணியானபட்டணஞ்சேல நாமக்கல்,
வங்காளங் கும்பகோணத்திலுள தான,
கனிசமுள புடவை யிது சுந்தரர் மீனாட்சி,
கல்யாணமுன்னிட்டு வாங்கி வந்ததுவே. (ஏலேலோ ) (8)

மேலானோர் போற்றுங்கண்ட- னூரில்
விமலர்சுந்தரேசர்மீனாள்
மாலானகப்பலிலே -- யொழுங்காய்
மன்னர் வரும் வரிசைகளாம்.

(முத்து)
அன்புமிகு அங்கமருணம்முடனவந்தி,
ஆந்திரமிலாடமிகுயவன மொட்டியமுங்,
கன்னடங் கன்னாடம் காசங்காஷ்மீரங்,
காந்தாரங்காம்போ சங்கருசமுடன் கலிங்கங்,
கொன்னுதவுகோசலங் குருகுருடகஞ்சேர் ,
குந்தளங்குருவிந்தங்கூர்ச் சாங்கொல்லந்,
தென்னவன்கிராடமொடுசால்வஞ் சவ்வீரஞ்,
சிங்களஞ்சகஞ்சிந்து சீன கொங்கணமும்
சொன்னதயமாஞ்சோழ சோனகந் துளுவஞ்.
சூரசேனந் திராவிடம் தெங்கணமும்,
நின்மலமதானதோர் நிடதகேகயமும்,
நேர்பாளபாஞ்சாலபப்பர பல்லவமும்,
மன்னு போடம் புலிந்தமகதமொடுமச்சம்,
மாளவமராடமொடுமலையாளம் வங்கம்,
நன்னயமதாயுகந்தவங்காளம் விதர்ப்பம்,
நாட்டரசான் பத்தாறார் பேரும் வந்தனரே. (ஏலேலோ) (9)

சுந்தரமாய் விளங்குங்கண்ட - னூரில்
சுத்தானாம்பிகையாள்

அந்தமுளகப்பலிலே - வந்த
அபிஷேகச்சாமானாம்.

(முருகு)

சந்தனங்குங்குமங்காபகஸ்தூரி,

தகைமையாம் பச்சக்கற்பூரஞ்சவ்வாது ,

அந்தமுளகோரேசனை கொச்சிமஞ்சள் ,

அருமையுளசெந்தூரம்வங்காளம்பச்சை,

சிந்துதேசாம்ப்ராணித்தயிலஞ்சம்பங்கி,

சிறப்பான வெப்பாயிப் பன்னீரும் புழுகும்,

கந்தமுள வெட்டிவேர்விலாமிச்சை வேருங்

கணக்கிலமையாதலிணக்கமாய்வைக்க, (எலேலோ ) (10)

கல்விமிகவிளங்குங்கண்ட - னூரில்

கவுரிமீனாட்சி சுந்தரர்

செல்வமது வளர்ந்தேறக் - கருணை

சிறக்குங்கப்பற் பாட்டிதுவே.

(முடுகு)

வேதப்பிராமணர்கள் மிகவோங்கவாழி

வெண்குடையரசர்தஞ்செங்கோலும் வாழி

சீதமுளவணிகருஞ்சூத்திரரும்வாழி

நிலையான அறம்பொருளின்பமும்வாழி

சாதகமனதான மீனாட்சிசுந்தரேர்

தகைமையுள்கல்யாணமிக நடக்கவாழி

நாத முன் வேதாந்தசாஸ்திரமும் வழி

நாகலிங்க தேசிகனால் தோலும் வாழி (ஏலேலோ)

**கப்பற் சிந்து முத்தித்து**

**---------------xxx------------**

## 2. சிறுமணவூர் முனிசாமி முதலியார் எழுதிய நந்தனவருட சிந்து

விநாயகர் துதி.

நந்தன வருஷத்தின் நற்புதுமை தன்னையிப்போ
விந்தையதா யுரைக்க விநாயகன்றன் மெல்லடியை
சிந்தைதனில் யான் தியானித்துச் செந்தமிழால்
பந்தமதா யுரைத்தேன் பார்மீதி லுள்ளவர்க்கே.

கைலாய கெவர்ண்மெண்ட் தாய்மூலத்தீவு காயாபுரிஜில்லா
கருவூர்த்தாலூக்கா ஆத்மநாதன்வகையரா சந்தேக
முதலியார் சகோதான் சிற்றூர் சுகானந்த முதலியார் புலம்பல்.

விருத்தம்.

உலகளித்த சிவமேநீ யிறந்திட்டாயோ
 வுயிர்படைக்கும் பிர்மாநீ யொழிந்திட்டாயோ
கமலமிசை கார்க்கவல்ல கண்ணாநீதான்
 கடலோடே அழிந்துவெகு காலமாச்சோ
சிலையெடுக்கா சிறுவயதி லுபதேசித்த
 சண்முகனே யுன்னறிவு சிந்திப்போச்சோ
பலவுயிருங் கதிரவனால் மடியத்தானோ
 பண்ணிவிட்டீர் கைலையென்ன பாழோகாணேன்.

சிங்காரச்சிந்து.

மாடுவித்தேன் ஆடுவித்தேன் மனைநிலமும் அளந்துவித்தேன்
காடுவித்தேன் கழனிவித்தேன் கலப்பைதாத்துகோலும்வித்தேன்

இன்னம்மழை காணோமே - நான்
எங்கேபோகத் தோணுவேன்

பெட்டிவித்தேன் பேழைவித்தேன்
பொன்னகையு முருக்கிவித்தேன்
கட்டிருந்த வேட்டிவித்தேன்
கைப்பொருளுந் தோற்றுவிட்டேன் (இன்)

பொன்னும்வித்தேன் பொருளும்வித்தேன்
பொங்கித்தின்னும் சருவைவித்தேன்
நின்றிருந்த நிழலும்வித்தேன்
நேற்றெடுத்த கிணறும்வித்தேன் (இன்)

பச்சைநிறத் தோப்பும்வித்தேன்
பழையநிலக் கரம்புவித்தேன்
இச்சைபோலப் பால்கொடுக்கும்
யிளம்பசுவுங் கண்ணும்வித்தேன் (இன்)

உரைகிணறுந் துறவுவித்தேன்
ஒண்டிமர யேத்தம்வித்தேன்
கரம்படிக்கும் யெருதும்வித்தேன்
கட்டும் வண்டி ஐதையைவித்தேன் (இன்)

ஏரியெங்கு முலர்ந்துபோச்சு
யெடுத்தகிணற் பாறையாச்சு
மாறிவரும் ஆற்றங்கரை
மண்தூள் பறந்துபோச்சு (இன்)

சேலைவித்தேன் நூலைவித்தேன்
சிறுகுழந்தை பணியும்வித்தேன்
காளையெருமை மாட்டைவித்தேன்
கைப்பணமுந் தோற்றுவிட்டேன் (இன்)

ஊரும்விட்டேன் பதியும்விட்டேன்
உள்ளதெல்லா மிழந்துவிட்டேன்
வேறேயொரு துணையறியேன்
வெள்ளிமலைப் பரமசிவா (இன்)

தட்டுவித்தேன் மூட்டுவித்தேன்
தவலைசொம்பு அடவுவைத்தேன்
பட்டணத்தில் போய்பிழைக்க
பாதைவழிச் சிலவுமில்லேன் (இன்)

அருமையெல்லா மறிந்தசாமி
ஆதரவு யிங்கார்நேமி
சிறுமணவூர் முனிசாமி
சொல்லுந்தமிழ் கேழ்க்கும் பூமி (இன்)

விருத்தம்.

முப்புரத்தில் கொள்ளிவைத்த மூன்றாங்கண்ணா
    மெய்யிலறை யிடங்கொடுத்த அந்திவண்ணா
சப்தமே கங்கள்செய்யுந் தொழில்தானென்னா
    சாமியென்றா லுனக்கிந்த மறதியென்னா
இப்படியோ ருனைத்துதிக்க நீதியென்னா - நீ
    யிருந்தாறு மிறந்தாலு மெங்கட்கென்னா
வற்புதமே வருஷமொரு மூன்றாய்நண்ணா
    வருஷிக்கா விபரமதின் வகையைக்காட்டே

பிரைமதியுன் முடியின்மிசை யுண்மையானால்
    பகிரதியுன் பத்தினியாள் மெய்யேயானால்
சிரமாலைத் தோளணிந்த துண்மையானால்
    சிவகாமி யுன்னிடத்தாள் மெய்யேயானால்
அரவணையோன் மைத்துனனே யுண்மையானால்
    அறுமுகனுங் கணபதியுன் பிள்ளையானால்
சரியிந்த கரைகடந்த நந்தனத்தில்
    சத்தியமாய் மழைபொழியச் சாதிப்பாயே.

ஒயில்கும்மி.

தீட்சதர்சூழ்தில்லை மன்றுள்நடராஜ
    தெய்வமே நீகண்ணால் பாராயோ
திகழும்புவி மேலேவெகு நாளாய்மழை பொழியாகுறை

செப்பவுங்காதினிற் கேழ்க்கிலையோ. (1)

அண்டர்கள்சூழ்தில்லை மன்றுள்நடராஜ
அப்பனே நீகண்ணால் பாராயோ
அகிலந்தனில் ஜலமின்றியே நிலைவிண்டவர் அலையும்பெறு
அபயக்குரல்காதிற் கேழ்க்கிலையோ. (2)

பாம்பும்புலிசூழும் மன்றுள்நடராஜ
பாமேவுன் கண்ணினால் பாராயோ
பாரெங்கிலும் நீரின்றிய கோரந்தனை நேராகவே
பகரவுமுன்காதிற் கேழ்க்கிலையோ. (3)

இவ்விதமாக சுகாநந்தமுதலியார் தன் அணிமணிப்பணி முதலிய அசையும்பொருள் அசையாப்பொருள் யாவற்றுந் தோற்று புலம்புந் தருணத்தில் ஷை முதலியார் வகையரா கருவூர் ஆத்மநாதன் வாசியணையில்படுத்து சுழியறையில் நித்திரை செய்யும்போது ஒளியில்கண்ட சொற்பனத்தை வெளியில் சொல்லுகிற விதம் அறிவோமாக.

-------------

ஆத்மநாதன் கினவு.

இ-ம்- நாதநாமக்கிரியை-அடதாளம்.

பல்லவி.
நந்தனத்தின் விந்தையைக்கேளும் - நடந்துவரும்
நந்தனத்தின் விந்தையைக்கேளும்

அநுபல்லவி.
நந்தனத்தின் விந்தைசொல்ல முந்திவருமெந்தைபிரான்
தந்திமுகன்கந்தமலர் சிந்தைதனிலே நினைந்து (நந்த)

சரணங்கள்.
ஏற்றிமிகுமித்தரையிற் புத்திமிகுமுத்தமரே
சித்திரைப்பத்தொன்றுமுத லொத்தயிருபத்துக்குள்ளே

மேகங்கள் கிளம்பிவருமே ஈசானியத்தில்
வேகமாக மின்னலிடுமே

அண்டவரையெண்டிசையும் கண்டவரைத்தொண்டுகொள
விண்டிடலடங்காமலே பண்டாயுளமேகமெல்லாம்

இருட்டாயிருட்டிவிடுமே அடிக்கடி
இடிக ளிடித்துவருமே

சென்னையெனுமிந்நகரிற் பன்னவொருநூற்றியிரு
பத்துமயில்சுத்திலெந்த பக்கமோவோர்திக்குதனில்

கல்மழைகலந்தடிக்குமே கண்டவர்கள்
சொல்லவு மனத்துடிக்குமே

பையரவஞ்செய்யுமனத் துய்யவறிவுள்ளவரே
வைகாசிமாதந்தனிலே ஐயையோவெய்யலினாலே

ஜீவராசிசேதமாகுமே சிலவிடத்தில்
தீயினால் மரணம்வருமே

மோனமெனும்ஞானவழி கியானமுளமானிடரே
ஆனியிரண்டாறில்பெருங் காணிலும்பர்வதமும்

ஏகமானவெள்ளம் வருமே ஜீவநதி
யோரநகர் சாகரமாமே (நந்த)

பார்க்கடல்முதலாயந்த மேற்கடல்சமீபசேலம்
நீர்க்கடல் சென்னையின் மட்டும் கார்க்கவேகடகமாதம்

அங்கங்கேமழையடிக்குமே மரங்கள்வேரை
சங்கசங்க மாய்ப்பிடுங்குமே

அம்புவியில் தன்பதிமெச் சின்பருமன்பர்களே
சிம்பமெனுமாவணியில் கும்புகும்பலாகமேகம்

பானுவைமறைத்துவிடுமே ஐந்தாறுநாள்
வேணயிடி புடைதருமே

மலைகள்செடிகள்போலும் கரிகள்பரிகள்போலும்
சிரங்கள்கரங்கள்போலும் உரங்கள் மரங்கள்போலும்

உருக்கள் தரித்துவருமே மேகசத்தம்
கேழ்க்கவும் பயங்கள் மிகுமே

பெருத்தமேகங்கள் நீரைக் குடித்துக்கருத்துநிற
மெடுத்துப்புரட்டாசியில் அடுத்துக்கடுகடுத்து

தெற்குமேற்கெங்குமழையாம் மற்றதிசை
தூத்தலுந் துளிகள்பொடியாம்

விற்பெரும்விழிமாதேயென் சொற்பனத்திலுமகலா
கற்பகக்குணத்தணங்கே ஐப்பிசிமாதந்தனிலே

சோனை மழைவேணதடிக்கும் தெற்குதிசை
காணவிழி னாணக்கொழிக்கும்

பார்க்கிலுள்ள திசையெட்டும் பேர்த்தெடுத்துகவிழ்த்தாற்போல்
கார்த்திகைமாசத்தில்பெருங் காத்துடனிடியுங்கொண்டு

கல்லுகள்பிரட்டிவிடுமே மலைகளெல்லாம்
பில்லுபோ லசைத்துவிடுமே

பலபல ஜீவராசி நிலைதளர்ந்தேகலங்கி
கலகலென்றேமரங்கள் பளபளென்றே முறிந்து

பறக்கும்பட்சியும் விழுமே யானை கூட

சரக்கி நிலத்தில்விழுமே

அந்தவிஷகாத்துஜென மந்தைகளையே மடக்கி
தொந்தரவைத்தந்துயேம னந்தப்புறமேகிடத்தி

சுரங்களதிகரிக்குமே ஊழியினால்
கணத்தில் வருத்தந்தருமே

மார்கழிமுதலாய்புவி சீர்படுமென்றேசுருதி
நேர்வழிசிறுமணவூர் பேர்வழிமுனிசாமியின்

வாக்கியம்பொய்யாதெனக்கண்டு இதற்கிசைந்த
பாக்கியத்தை அள்ளியே தந்து

பாரில்வருமார்சகல பேருமறிந்தேகளிக்க
ஏரகத்துக்கதிபதி ஆறுமுகதீரக்ஷீரம்

அச்சிலிட்டு தந்ததிதுவாம் புவியரசர்
மெச்சிடத் தகுந்தபொதுவாம்

தினகரனெனவொளி கனகராயவள்ளலால்
நிலைபெறுங்கலைமாது விளக்கமெனுமெந்திரத்தில் (நந்த)

--------------

இ-ம்-பியாகு - திரிபுடை தாளம்.

பல்லவி.

தத்தளிக்கவேண்டா மனமே-நந்தனத்தில்
மெத்தசுகம் வருமினிமேல்

சரணங்கள்.

அத்தனதுதிருவருள் சித்திரையிலேகிடைத்து
பத்தெட்டுவகைதானியம் மெத்தாயமாகவிற்கும் (தத்)

கருப்புநவதானியம் பருப்புவகை தினுசுகள்
ஒருபுறத்தொருபுறம் பெருக்கவிளைந்துவரும் (தத்)

பேசுமட்டத்திசையிலும் மாசமரசமும்மழையும்
வீசும்பெருங்காற்றுடனே ராஜயோகமாகப்பெய்யும் (தத்)

மாடமாளிகையுமதிர வாடைவீசுமென்பாரந்த
ஜாடையில்பலவெண்ணங்கொண் டாடாமலேநீயிருப்பாய் (தத்)

பசிதாகமாரிசுரம் நிசிவிஷக்காற்றால் ஜீவர்
நதியுமென்பாரதற்கு மசியாமல் நீயிருப்பாய் (தத்)

இரங்கல்-விருத்தம்.

மானம்வெளுத்து அகவிலையாகி மனிதரெல்லாம்
ஜாணங்கம்வளர்க்கத் தயங்குதையோ சந்திரசேகனே
மேகம்பரவி இடிபிடித்ததுபோல் ஒருமின்னல்மின்னி
தேசஞ்செழிக்க மழைகொண்டுவா சிதம்பரதேசிகனே.

**நந்தன வருடச்சிந்து -முற்றிற்று.**

---------------------

## 3. சிறுமணவூர் முனிசாமி முதலியார் எழுதிய அகடவிகட கலியாணச் சிந்து

கடவுள்துணை.

### லோபிச்சிந்து யென்னும் இயற்பெயருடைய அகடவிகட கலியாணச்சிந்து,

**தொப்பை வணக்கம் நேரிசை - வெண்பா.**

கைகாலுந்தொந்கியெலாங் காணபயமாய்வீங்கி
மெய்தூக்கமாட்டாத மேதகனே-பொய்யேன்காண்
செல்லமகனார்க்கு செய்யும்விவாகத்திலுனை
சொல்லா திருப்பேன் துணை.

**குரவன் துதி புராணவிருத்தம்.**

மலரெரிந்தவனைக்காய்ந்த மடையனார்மகனேநல்ல
குலமதைகண்ணிற்கொள்ளாக் குருடனேகூறக்கேளாய்
தலமதில்விகடஞானத் தனையர்னாமனதின்போது
சிலைசுமக்குரவாவுந்தன் சேவடியெனக்குப்போற்றி.

**தகப்பனாராகிய லோபிசொல் தெம்மாங்கு**

யென்மகனே கண்மணியே கொஞ்சம் ஈஸ்பீஸ்கற்றவனே
கலியாணமென்றுசொல்லும் ஒருகடனிருக்குதெங்களுக்கு

**சிந்து,**

பெண்ணும்படிந்தாச்சு பணமுந்துகையாச்சு
யிடமுங்குதுந்தாச்சு யெல்லாம்முடிந்தாச்சு
முன்னேபெரியவர்கள் முழுதும்பிழைத்திருந்த
நாட்டுப்புரம்போய்வருவோம் நட்டாமகனேயப்பா

**இதுவும்லோபிசொல் தெம்மாங்கு**

பட்டணத்தில்செய்யவென்றாலப்பா பகல்வேஷம்போடவேணும்
தட்டுமுட்டு ஆட்டமொடுகொஞ்சம் தலையொடிநிற்கவேணும்

**சிந்து.**

பத்தில்விழுந்ததொரு பாம்புமடியாதென்று
மெத்தப்பெரியவர்கள் யிட்டப்பழமொழிபோல்

ஆயிரங்காலப்பயிர் ஆகையினாலேமகனே
உரவில்கலந்துகொண்டால் ஒருபோதுங்குற்றமில்லை

**செல்வப்பிள்ளை சொல் - தெம்மாங்கு**

உரவும்வரகாச்சி அந்தஊர்மூஞ்சுங்காலசிப்போச்சி
ஐயோயெனக்கு அந்த ஆதறவுந் தேவையில்லை

***சிந்து.***

டோண்டுநோபாதரந்த தொல்லையெனக்கு வேண்டாம்
நாட்டுப்புரங்களெல்லாம் நான்ஸன்ஸ்வுகவாது
பைகாட்டுபிரதாகளோடு பட்டணந்தன்னிலே
பக்குவமாய்செய்யவெகு மிக்கவுரவிருக்குது

**லோபிசொல் தெம்மாங்கு**

அடவுன் படிப்பில்யிடியிடிக்க அந்தபாஷையொன்றும் தெரியலியே
நம்மகுடிவழக்கில்லாத கோணலெல்லாங்காட்டுகிறாய்

***சிந்து.***

ஏரியேமோக்ஷலோகம் ஏத்தமேலகைலாசம்
கழனியேபஞ்சாங்கம் சலப்பையேவேதாந்தம்
மண்ணேபிரதானம் மண்வெட்டியேசாஸ்திரம்
யிப்படியிழைத்துவிட்டோம் உன்னிழவுக்கென்னாசெய்வோம்

**செல்லப்பிள்ளைசொல் தெம்மாங்கு**

மாட்டைகுத்திமண்கிளரி இந்தமானமதைபார்த்தழுகும்
ரூபிளிகட்யின்றி பூல் நீதொணதொனென்று பேசாதே

***சிந்து.***

ஸ்டீர்ட்முழுதும்பந்தல்வேணும் சிங்காரக்கொட்டாய் வேணும்
வால்சேட்குளோப்புலஸ்தர் வரிசையாய்மாட்டவேணும்
பிரண்டுகள்ஷேகேன்கொடுத்து பலமாயுலாத்த வேணும்

ஷ்டவுடபீ மில்ஸ்லேடிகளால் சதுர்கள் நடத்தவேணும்

கச்சேரிகாலட்சேபம் காலைமாலை பாடவேணும்
பிரஞ்சுபுலாகிச்சடிகள் பிச்சைக்கொடுக்கவேணும்
அதிற்வேட்டுமேளவகை அண்டங்கிழியவேணும்
இப்படிநடத்திடாமல் தப்புந்தாறும்பினத்துகிறாய்

**லோபிசொல் தெம்மாங்கு**

பட்டணத்தில்முட்டைளித்து அப்பாவுன்னை
படிபடியாய் நான்வளர்த்தேன்,
நண்டுக்கிடம் விட்டதுபோல் யென்பணத்தை
நாலுவழி யாக்கவந்தாய்

**செல்வப்பிள்ளை சொல் சிந்து.**

நாலுவழி மூணுவழி நாலுமூணும்யேழுவழி
யெந்தவழி போனாலென்ன வந்தவழி நீபாரு
காடும் அழைக்குதிங்க வீடுந்துரத்துதிங்கே
போடயுபிளட்டி சுவர் பணம்போனால் மயிர்போச்சி

**செல்லப்பிள்ளைசொல்விருத்தம்.**

அல்லோயென்பிரரணரான பிரகற்களேதோழமரே
பொல்லாதகிழவன்பேனோ பிடிவாதம்மியற்றுகின்றான்
நல்லநாள் பார்த்தென் சற்று நமக்குநீர் உதவிசெய்தால்
யெல்லாருஞ்சேர்ந்துயின்றே யெம புறங்காட்டலாமே

**தரு.**

யெட்டியுதையுமெந்தன் மிஸ்டரே ஒரே
தட்டாய் தட்டிப்போடும் யிஷ்டரே

மட்டிக்கிழவன்சும்மா மனமும்பொருக்கமாட்டான்
மயிலைப்போன்றவேசி மார்க்குங்கொடுக்கமாட்டான்

பரத்தையர்சுகமிந்தப் பாவியறியமாட்டான்
பணத்தைப்புதைத்து பூகம்போல்கார்க்கிறான்

அறுமைலேடிசள்சும் அணுவுமறியமாட்டான்
சிறுமணவூர் தமிழ் சொல்லுங்கேழ்க்கமாட்டான்

வம் இவ்விதமாக பிரண்டுகளோடு கூடிக்கொண்டு அகஸ்மாத்தாக அடீல்தடீல் வேடிக்கையுண்டுபண்ணி கிழவனுக்கு ஆனமட்டும் சரிப்படுத்தி மூலையில் தள்ளிவிட்டு சினேகிதர்களுக்கு உஷார்படுத்துகிற விதங்காண்க.

**செல்லப்பிள்ளை சொல் ஆனந்தக்களிப்பு.**

பைகாட்சி நேகரேவாரும் எந்தன்
பணம்போனால் போகட்டும் வேடிக்கைபாரும்

பெற்றார்மனம் நொந்துவேகட்டும் நம்ம
பேர்மாத்திரங்கோட்டை கொடிபோல்பரக்கட்டும்.

உற்றாருரவெல்லாம் சாகட்டும்சரியாய்
ஒவ்வொருஆயிரம் தூசிபோல் பறக்கட்டும் பை

வேசிலெல்லாம்நம்மை நினைக்கட்டும் தினம்
வீண் தர்மம்செய்வோர்கள். ஆந்தைபோல்முழிக்கட்டும்
ராஜனென்றே நம்மை மதிக்கட்டும் நல்ல
ரயிட்டானடப்ளார்சு பீட்டின்கள்பரக்கட்டும் பை

சென்னையிலேபுகழ் விளங்கட்டும்சிறு
மணவூர் முனிசாமி தமிழாகசொல்லட்டும்
பன்னியுலகெங்கும் படிக்கட்டும் இதை
படிவிற்போர்களும் சில நாள்பிழைக்கட்டும் பை

**செல்வப்பிள்ளை சிநேகருக்குச் சொல்விருத்தம்,**

திக்கெங்கும் புகழ்படைத்தோ னெனக்கிசைந்த
செல்வர்களேசிங்காரத் தோழரரே
மற்கட்டும் தீரர்களே பணங்கரைக்க
மந்திரிபோஸ் தந்திரங்கள் செய்யும்பேரே
டிக்கட்டும்போட்டுயெந்தன் கலியாணத்தை
திரைகடல்சேருலகமெல்லாந்தெரியவிக்க
சொற்கட்டும் வந்தனங்கள் முகூர்த்த நேரம்

சுருக்காகவெழுதி நிரை வேற்றுவீரே

ஆஆ எனது அரியவிரிய பெரியபிரியமுள்ள செல்வப்பிள்ளையே கேளும் நம்மடிக்கட்டைப் பார்த்தாலோ இந்திரன் அனுப்பிய திருமுகம்போலிருக்கவேணும் அதிலுள்ள சங்கதிகளோ திருமூர்த்திகளும் அறியக்கூடாது ஏனென்றால் தாய்வுரவென்றும் தங்கையுரவென்றும் மந்தைமந்தையாவந்து சோத்தை வலித்து பார்த்தவிடமெங்கும் பதுங்குவார்கள் ஆகையால் அந்தப்பணத்தையெல்லாம் சங்கீத சாயித்திய பரதநாட்டிய சுகபோகத்திற் சிறந்த நமது அருமைகண்மணிகளாகிய லேடிகளுக்கு முத்தாரங்கள் தோடாக்கள் கண்டாமணிகள் நவலோகங்களால் அமைத்தசேலைமுதலிய ஆடையாபரணாதிகளை பரிசுக்கொடுப்போமானால் நம்மபெயர் யென்றைக்கும் அழியாதிருக்கும் ஆகையால் டிக்கட்டுமாத்திரம் இக்கட்டாகவே இருக்கவேணுமிஷ்டரே.

**செல்வப்பிள்ளை கலியாண டிக்கட்டின் விவரம்**

திகழ்மகிழ்புகழ்படைத்த சென்னைவளர்
சேல்வர்களே விபரம் சொல்லுவன்கேள்

நிகழுமிங்கிலீஷ் வருஷம் ஆயிரத்தி
யெண்ணூத்தி தொண்ணூத்து யெண்ணில் புகுந்து
நழுவியதமிழாண்டு மகாஜித்து
வருஷங்கூத்தாடிமாதம் நாற்பத் தேதி
உக்கிரவாரம்சிங்கமுகத்தில் இருவருக்கும்
ஒருமித்தசுபதினம் மரணயோகத்தில்
காலையில் ஒருமணிக்கி வாய்திரந்து
கண்டமீனை துண்டு பூனை லக்கினத்தில்
என்னிட நெஸ்ட்டைபுத்திரன் சிரஞ்சீவி
யேணிபோலேபல் நீண்ட ஆசாமிக்கும்
தானறியாதவூர்க்கு மணியம்
தாசில்முனிஷி ப்புமகள் யேகபுத்திரி
பஜாரிவேங்கையம்மாள் இருவருக்கும்
பத்திரிகைசொன்னபடி சுபதினத்தில்
வெள்ளைபட்டணம் நடுவில் ஐயா
கொள்ளையடித்தான்மூலை பள்ளத்தெருவில்
அப்படி இப்படியுந்தள்ளி டோர்ரெம்பர்
ஆனமட்டும்யென்வீடு செங்கல்கிரகத்தில்
நடக்கும்முகூர்த்தத்திற்கும் மருநாள்

நாலுபேர்க்குமுன்கொளுந்தும் அக்கினிபேட்டிக்கும்
இடையுபவாசத்திற்கும் தங்கள்
யிஷ்டருக்கு இஷ்டரொடு சஷ்டமாய்வந்து
மேல்படிசபகிரிகை அர்த்தத்தை
மெள்ளமெள்ள நெட்டியே நடத்துவீரென்று
மண்டிபோட்டு விண்ணப்பஞ்செய்து தங்கள்
கீழானகனத்தைகொஞ்சம் பிராத்திக்கின்றேன் தந்தின

**செல்வப்பிள்ளை சொல் லாவணி**

வல்லமைமிகுந்த செல்வரேயுமது
கல்விகள்சேர ஐயா
வளமாய்நே டீசுபலமாயெழுதுநீர்
வாருவார் வெகுபேறே

வாரமும்யோகமும் இப்படியமைந்திட
வருந்தீர்பஞ்சாங்கம் ஐயா
வையகத்திலுமக்குநான் கைம்மாறுசெய்திட
வறியேன் மெஞ்ஞாவம்

செல்வத்தில்மிகுந்த சீமானென்றெனக்கு
செய்தீர் வுபகாரம்
சிறுமணவூர்முனிசாமிசொல் தமிழுக்கு
செய்வேனே நமஸ்காரம்

**சிநேகிதர்சொல் தெம்மாக்கு.**

டிக்கட்டுமாத்திரமே தீர்ந்ததென்று யெங்கள்பேரில்
யிக்கட்டு நினைக்கவேண்டாம் யெல்லா வேலையும் தீர்ந்துதையா

ஐயா, பந்தல்முழுதும் தீர்ந்துபோச்சு.
பாவைநடனம் கொட்டாயாச்சு
அந்தமான லயிட் தினுசு
ஆயிரம்வரிசை மாட்டியாச்சு

ஐயா, வாழைகமுது தேங்குமலைகள்
வர்ன்னக்கூந்தல் யீச்சங்குலைகள்

தாழையருகு குருவேர்தவனம்.
தனித்தனிரஞ்சிதம் மதனபாணம்

ஐயா, சகலவேலையும் முடிந்துபோச்சி
சரியாய்முகூர்த்தம் நெரிங்கிபோச்சி நன்

தெ அமாவாசைறாவு காலம் ஆருயிர்க்குமரணயோகம்
வேளை தப்பிபோகுமுன்னே வலித்துகழுத்தில் யிழுத்துகட்டுவீர்

ஐயா, பொழுதுவிடிந்தால் கூட்டஞ்சேரும்
பிண்டா சோத்துக் கிழவுகொடுக்கும்
விடியயிரண்டு ஜாமமிருக்கும்
வேலையிப்பவே நடத்திப்போடும்

ஐயா, வந்தபேர்கள் வழியைபார்க்கட்டும்
வாத்தியக்கார்கள் குந்தியழட்டும்
சார்ஜிகேட்டால் இழுத்துஉதைப்போம்
சம்மன்கொணந்தால் கவிழ்ந்துபடுப்போம்

ஐயா, இந்தபுத்தியும் சொல்லவேணுமோ
ஏனோயிப்படி முழிக்கலாகுமோ நன்

தெ பஞ்சாங்கம் தப்பாமல் பலஜெனமும் சேராமலே
அஞ்சாதுபேறாயந்த றாத்திரியில்நடத்திபோட்டார் நன்

ஐயா, பொழுதுவிடிந்து பூனை தூங்குது
போனஜனங்கள் வழியைப்பார்க்குது
பொவுசுகெட்டு நாம் ஓடிவந்ததில்
பொழைக்கும்பொழப்பும் போச்சேயென்குறு

ஐயா, ஜெனங்கள் இப்படி. கலையும்போது
செல்வப்பிள்ளையும் முடிக்கியெழுந்து
டர்ட்டீபவர் பாப்பான்காணம்

சனவர்பிச்சி யெவனுள்காணம்

ஐயா. போலீஸ்சார்ஜி பண்ணிப்போடுவேன்
பிடித்துஜெயிலுக் கனுப்பிவிடுவேன் நன்

நெ காசில்லா கலியாணம் கண்குளிரவே நடத்தி
யீசனருளால்வருஷம் யிரண்டிரண்டுபின்னை பெருவார் நன்

ஐயா, தவரும்பிள்ளைகள் காலையிழுங்க
தாண்டும்பின்னைகள் கையைபிடிக்க
உயர்ந்தபிள்ளைகள் வேட்டியிழுக்க
வீடுமுழுதும் இறைச்சலெடுக்க

ஐயா, வீடு நிறைந்த பிள்ளைகளோடு
வயரு நிறைந்த குழந்தையோடு
கைகள்நிறைய செல்வரோடு
கடவுளருளால் ஆயிசோடு

ஐயா, செழித்துவாழ்ந்தார் சுகமாயிருந்தார்.
பழுத்தகிழமாய் படுத்துமிருந்தார் நன்

தெ புலவரடி மரவாப் பின்ளைமுனிசாமிதமிழ்
உலகரிய அச்சிலிட்ட உத்தமரைக்கேள்மனமே நன்

கடல் நிறைந்த வுலகுக்குள்ளே
கன்யாகுமரி வளவுக்குள்ளே
ஊருக்கெல்லாம் அன்னையென்று
வுரைக்குஞ்சென்னை நகருக்குள்ளே

அடியே - ஆனைகெவுனி பாளயம் நெடுகே
ஆதியப்பன் வீதிவந்தே
சேனார்மதுவுன் கடையைவிற்றே
செழித்துவாழும் நல்லமனதே

| | |
|---|---|
| அடியே - காந்தரிஷியின் | கோத்திரமாம் |
| கண்ணேபெயரும் | ஆறுமுகமாம் நன் |

**அகடவிகட கலியாணச் சித்து முற்றிற்று**

**-----------------------**